**செ.வெ.எண்:54** **நாள்: 26.06.2019**

# அரியலூர் மாவட்டத்தில் விவசாய குடிகள் மாநாடு நடைபெற்றது.

அரியலூர் மாவட்டத்தில் 1428-ஆம் பசலி ஆண்டிற்கான வருவாய் தீர்வாயம் கணக்கு முடிப்பு இறுதி நாள் நிகழ்ச்சியாக விவசாய குடிகள் மாநாடு நிகழ்ச்சி ஜெயங்கொண்டம் வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

**இந்நிகழ்ச்சியில், வருவாய்த்துறையின் சார்பில் 12 நபர்களுக்கு பட்டாக்கள் மற்றும் 10 நபர்களுக்கு உதவித்தொகைக்கான ஆணைகளையும், வேளாண்மைத்துறையின் சார்பில் 6 நபர்களுக்கு வேளாண் இடுபொருட்களும், 4 நபர்களுக்கு அரசு கேபிள் டி.வி வாயிலாக தனியார் இ-சேவை மையங்களுக்கு உரிமம் வழங்கி, மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததவாது :-**

அரியலூர் மாவட்டத்தில் 19.06.2019 முதல் 26.06.2019 வரை நடைபெற்ற ஜமாபந்தி (வருவாய் தீர்வாயம்) நிகழ்ச்சியில் மொத்தம் **7212** மனுக்கள் பெறப்பட்டு, **3004** மனுக்கள் தீர்வு காணப்பட்டு, **3263** மனுக்கள் விசாரணையில் உள்ளது. மேலும், **945** மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது

**அரியலூர்** வட்டத்திற்குட்பட்ட **ஜமாபந்தி (வருவாய் தீர்வாயம்)** நிகழ்ச்சியில் இதுவரை மொத்தம் **1988** மனுக்கள் பெறப்பட்டு அவற்றில் **1271** மனுக்கள் தீர்வு காணப்பட்டு, **563** மனுக்கள் விசாரணையில் உள்ளது. மேலும், **154** மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. **ஆண்டிமடம்** வட்டத்திற்குட்பட்ட **ஜமாபந்தி (வருவாய் தீர்வாயம்)** நிகழ்ச்சியில் இதுவரை மொத்தம் **1127** மனுக்கள் பெறப்பட்டு, **398** மனுக்கள் தீர்வு காணப்பட்டு, **648** மனுக்கள் விசாரணையில் உள்ளது. மேலும், **81** மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

மேலும், **உடையார்பாளையம்** வட்டத்திற்குட்பட்ட **ஜமாபந்தி (வருவாய் தீர்வாயம்)** நிகழ்ச்சியில் இதுவரை மொத்தம் **2808** மனுக்கள் பெறப்பட்டு, **904** மனுக்கள் தீர்வு காணப்பட்டு, **1378** மனுக்கள் விசாரணையில் உள்ளது. மேலும், **526** மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. **செந்துறை** வட்டத்திற்குட்பட்ட **ஜமாபந்தி (வருவாய் தீர்வாயம்)** நிகழ்ச்சியில் இதுவரை மொத்தம் **1289** மனுக்கள் பெறப்பட்டு, **425** மனுக்கள் தீர்வு காணப்பட்டு, **680** மனுக்கள் விசாரணையில் உள்ளது. மேலும், **184** மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், துணை ஆட்சியர் (சமூகபாதுகாப்புத்திட்டம்) நா.உமாமகேஸ்வரி, மாவட்ட வட்ட வழங்கல் அலுவலர் எம்.ரவிச்சந்திரன், வட்டாட்சியர் குமரய்யா, துணை வட்டாட்சியர்கள், நில அளவை அலுவலர்கள், வருவாய் ஆய்வாளர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள், கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் வருவாய் துறை அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**